©

**தமிழ்நாடு அரசு**
**2022**

**கையெழுத்துத் தொடர்**

## நிதித் (ஓய்வூதியம்) துறை

## அரசாணை (நிலை) எண்.06, நாள்: 01-01-2022.

(*பிலவ, மார்கழி- 17, திருவள்ளுவர் ஆண்டு 2052.*)

**சுருக்கம்**

**ஓய்வூதியம்** - ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு அகவிலைப்படி – 01-01-2022-ஆம் நாள் முதற்கொண்டு திருத்தப்பட்ட வீதத்தில் அனுமதித்தல் – ஆணைகள் – வெளியிடப்படுகின்றன.

---

**படிக்கப்பட்டது:-**

1. அரசாணை (நிலை) எண்.327, நிதி (ஓய்வூதியம்) துறை, நாள்:21-10-2019.
2. அரசாணை (நிலை) எண்.232, நிதி (படிகள்) துறை, நாள்:27-04-2020.
3. மத்திய நிதி அமைச்சக செலவுத் துறையின் அலுவலகக் குறிப்பாணை எண்கள்.1/1/2020-E-II(B), நாள்:20.07.2021 மற்றும் 1/4/2021-E-II(B), நாள்:25.10.2021.
4. அரசாணை (நிலை) எண்.03, நிதி (படிகள்) துறை, நாள்: 01-01-2022.

-oOo-

**ஆணை**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்டுள்ள அரசாணையில் மாநில அரசு ஓய்வூதியதாரர்கள்/ குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு கீழ்கண்டவாறு திருத்திய அகவிலைப் படி வீதங்கள் வழங்கி ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன: -

| **எந்நாளிலிருந்து வழங்கத்தக்கது** | **திருத்தியமைக்கப்பட்ட அகவிலைப்படி வீதம்** [மாதம் ஒன்றுக்கு] |
|---|---|
| [1] | [2] |
| 01.07.2019 | அடிப்படை ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியத்தில் 17 சதவீதம் |

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்டுள்ள அரசாணையில், மத்திய அரசு நிதியமைச்சக செலவுத் துறையின் குறிப்பாணையினைத் தொடர்ந்து, கோவிட்-19 பெருந்தொற்று நோயால் ஏற்பட்ட கடுமையான நிதி நெருக்கடியைத் கருத்தில் கொண்டும், மத்திய அரசு மேற்கொண்ட முடிவினையே தமிழ்நாடு அரசும் செயல்படுத்த கருதி மாநில அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஓய்வூதியம் பெறுவோர்/குடும்ப ஓய்வூதியதாதர்களுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்ட 17 சதவீதம் அகவிலைப்படி வீதத்தை தொடர்ந்து வழங்கியும், உயர்த்தி வழங்கப்பட வேண்டிய அகவிலைப்படியினை

த.பி.பா.

ஜனவரி 2020 முதல் ஜீலை 2021 வரையிலான காலத்திற்கு நிறுத்தி வைக்கவும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்டுள்ள மத்திய நிதி அமைச்சக செலவுத் துறையின் அலுவலகக் குறிப்பாணைகளில், மத்திய அரசுப் பணியாளர்களுக்கான அகவிலைப்படியினை அடிப்படை ஊதியத்தில் 17 சதவீதத்திலிருந்து 28 சதவீதமாகவும் மற்றும் 28 சதவீதத்திலிருந்து 31 சதவீதமாகவும் உயர்த்தி அனுமதித்துள்ளது.

4. மேலே நான்காவதாக படிக்கப்பட்டுள்ள அரசாணையில், மாநில அரசு பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான அகவிலைப்படியினை 01-01-2022 முதல் 17 சதவீதத்திலிருந்து 31 சதவீதமாக உயர்த்தி அனுமதித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

5. மேலே நான்கில் படிக்கப்பட்ட அரசாணையினை பின்பற்றி, மாநில அரசு ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு தற்போது கீழே குறிப்பிட்டுள்ளபடி, திருத்தப்பட்ட வீதத்தில் அகவிலைப்படியினை அனுமதித்து அரசு ஆணையிடுகிறது: -

| **எந்நாளிலிருந்து வழங்கத்தக்கது** | **திருத்தியமைக்கப்பட்ட அகவிலைப்படி வீதம்** [மாதம் ஒன்றுக்கு] |
|---|---|
| [1] | [2] |
| 01-01-2022 | அடிப்படை ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியத்தில் 31 சதவீதம் |

6. இந்த ஆணையில் அனுமதிக்கப்பட்ட கூடுதல் தவணை அகவிலைப்படியினை 01-01-2022 முதற்கொண்டு ரொக்கமாக வழங்கப்படும்.

7. திருத்தப்பட்ட அகவிலைப்படியைக் கணக்கிடுகையில் ஒரு ரூபாய்க்குக் குறைவாக வரக்கூடிய தொகை, அது 50 காசும் அதற்கு மேலும் இருக்குமாயின் அது அடுத்த ஒரு ரூபாயாக கணக்கிடப்பட வேண்டும். அதுவே, 50 காசுக்குக் குறைவாக இருந்தால் அது விட்டுவிடப்பட வேண்டும்.

8. ஒவ்வொரு தனி நபருக்கும் கொடுக்கப்பட வேண்டிய அகவிலைப்படியைக் கணக்கிடுவது ஓய்வூதியம் வழங்கும் அதிகாரிகளின் பொறுப்பாகும்.

9. மாநிலக் கணக்காய்வுத் தலைவரிடமிருந்து முறைப்படியான அனுமதி பெறும் வரை காத்திராமல் ஓய்வூதியம் வழங்கும் அதிகாரி, சென்னை-35 மற்றும் கருவூல அதிகாரிகள் உடனடியாக திருத்திய அகவிலைப்படியை வழங்கலாம்.

10. இந்த ஆணை கீழ்க்கண்ட வகைகளைச் சேர்ந்த ஓய்வூதியதாரர்களுக்குப் பொருந்தும்.

(i) அரசு ஓய்வூதியதாரர்கள், அரசு உதவி பெறும் மற்றும் உள்ளாட்சி மன்ற கல்வி நிறுவனங்களின் ஓய்வூதியம் பெறும் ஆசிரியர்கள் மற்றும் உள்ளாட்சி மன்றங்களின் ஏனைய ஓய்வூதியதாரர்கள்.

(ii) பொதுத்துறை நிறுவனம் / தன்னாட்சி நிறுவனம் / உள்ளாட்சி அமைப்பு / கூட்டுறவு நிறுவனம் முதலியவற்றில் ஒட்டுமொத்த தொகை பெற்ற ஓய்வூதியத்தை தொகுத்து பெறும் தொகையில் தொகையைத் திரும்பப் பெறும் தகுதியுள்ள / திருத்தியமைக்கப்பட்ட வீதத்தில் திரும்பப்பெறும் தொகை பெற தகுதியுள்ள மாநில அரசுப் பணியாளர்கள்.

(iii) தற்போதைய மற்றும் எதிர்கால குடும்ப ஓய்வூதியர்கள்; பகிர்வு முறையில் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களைப் பொறுத்தவரையில் அகவிலைப்படி விகிதாச்சாரத்திற்கிணங்க பிரிக்கப்படலாம்.

(iv) 1-11-1956ஆம் நாளன்று, தமிழ்நாடு மாநிலத்திற்கு மாற்றப்பட்ட பகுதிகளில் அதாவது கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் தென்காசி மாவட்டம் செங்கோட்டை வட்டத்தில் அமைந்துள்ள கருவூலங்களில் அதே நாளில் ஓய்வூதியம் பெறுகின்ற முந்தைய திருவாங்கூர்-கொச்சி மாநில ஓய்வூதியதாரர்கள்.

(v) தமிழ்நாடு சிறப்பு ஓய்வூதிய விதிகளின்கீழ் சிறப்பு ஓய்வூதியம் மற்றும் கருணைப்படி பெறும் ஓய்வூதியதாரர்கள்.

**11.** ஓய்வூதியதாரர்களுக்கும், குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கும் வழங்கத்தக்க அகவிலைப்படி குறித்த செலவினங்கள் முறையே கீழ்க்காணும் கணக்குத் தலைப்புகளில் பற்று வைக்கப்படும்.

"2071. ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் – 01. சிவில் – 101. வயது முதிர்வு – பணி ஓய்வுக்காலப் படிகள் மாநிலச் செலவினங்கள் – AC. ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு அகவிலைப்படி – 303. அகவிலைப்படி - 01 அகவிலைப்படி.

**பழையது:** (த.தொ.கு. 2071 01 101 AC 0306)

IFHRMS: (த.தொ.கு. 2071 01 101 AC 30301)"

"2071. ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் – 01 சிவில் – 105 குடும்ப ஓய்வூதியங்கள் - மாநிலச் செலவினங்கள் – AC தமிழ்நாடு அரசு குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு அகவிலைப்படி – 303 அகவிலைப்படி - 01 அகவிலைப்படி.

**பழையது:** (த.தொ.கு 2071 01 105 AC 0308)"

IFHRMS: (த.தொ.கு 2071 01 105 AC 30301)"

**12.** கருணைத் தொகை பெறும் மாநில அரசு மற்றும் முன்னாள் மாவட்ட வாரியத்தின் வருங்கால வைப்புநிதிக்குத் தொகை செலுத்திய / ஓய்வூதியம் இல்லாத பணியாளரமைப்பைச்

சேர்ந்த பயனாளிகளான இறந்துவிட்ட பணியாளர்களின் மனைவியர் மற்றும் குழந்தைகளுக்கு அகவிலைப்படி அளிப்பது குறித்த ஆணைகள் தனியாக வெளியிடப்படும்.

**13.** இந்த ஆணையில் அகவிலைப்படி அனுமதித்ததன் காரணமாக அதிகரித்துவிட்ட செலவினம், 1956-ம் ஆண்டு மாநில மறுசீரமைப்புச் சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்ட விதிமுறைகளுக்கிணங்க, அடுத்து வரும் மாநிலங்களுக்கிடையே பிரித்துக்கொள்ளத் தக்கதாகும்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**என். முருகானந்தம்**

**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.**

__பெறுநர்:__

அனைத்து அரசுச் செயலாளர்கள்.
தலைமைச் செயலகத்தின் அனைத்து துறைகள்.
சட்டமன்ற பேரவைச் செயலகம், சென்னை - 600 009.
ஆளுநரின் செயலகம், ராஜ்பவன், சென்னை - 600 022.
அனைத்துத் துறைத் தலைவர்கள்.
தமிழ்நாடு தகவல் ஆணையம், எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை-600 035.
மாநில கணக்குத்துறைத் தலைவர் (கணக்குகள் மற்றும் உரிமைத் தொகை), சென்னை - 18. (பெயரில்)
முதன்மை மாநில கணக்குத் துறைத் தலைவர் (தணிக்கை-I), சென்னை - 600 018.
மாநில கணக்குத் துறைத் தலைவர் (தணிக்கை-II), சென்னை - 600 018.
மாநில கணக்குத் துறைத் தலைவர் (CAB), சென்னை - 600 009.
பதிவாளர், உயர்நீதிமன்றம், சென்னை - 600 104.
செயலாளர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை - 600 003.
ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை – 600 003.
அனைத்து மாநகராட்சி ஆணையர்கள்.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் / மாவட்ட நீதிபதிகள் / முதன்மை நீதித்துறை மாஜிஸ்ட்ரேட்டுகள்.
அனைத்து மண்டல இணை இயக்குநர்கள், கருவூலக் கணக்குத் துறை.
ஓய்வூதியம் வழங்கும் அலுவலர், சென்னை - 600 035.
அனைத்து கருவூல அலுவலர்கள்/அனைத்து துணைக் கருவூல அலுவலர்கள்.
அனைத்து மாநிலக் கழகங்கள் / நிறுவனங்கள்.

__நகல் பெறுநர்:__

நிதி (அ.ந.மு.I / அ.ந.மு.II / அ.ந.மு.III / பல்வகை / ஓ.கு.தீ / ஊ.கு. / வரவு செலவு- பொது II / வரவு செலவு - (BGC - GBM) / பொது)த் துறை, சென்னை-600 009.
முதலமைச்சரின் தனிச் செயலாளர், சென்னை-600 009.
சிறப்பு நேர்முக உதவியாளர், மாண்புமிகு அமைச்சர் (நிதி மற்றும் மனித வள மேலாண்மைத்துறை) அலுவலகம், சென்னை-600 009.
அரசு கூடுதல் செயலாளர் / ஓய்வூதிய இயக்குநர், சென்னை-600 035.
ஆணையர், கருவூலம் மற்றும் கணக்கு துறை, சென்னை-600 035.

உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர், சென்னை-600 035.

அனைத்து நகராட்சி ஆணையர்கள்.

அனைத்து ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள்.

இந்திய ரிசர்வ் வங்கி, சென்னை–600 001.

இந்திய ரிசர்வ் வங்கி, அரசு மற்றும் வங்கிகள் கணக்குத் துறை, மத்திய அலுவலகம், மும்பை மத்திய இரயில்நிலையம் எதிரில், பைகுல்லா, மும்பை–400 008 (75 நகல்கள்)

பொதுத்துறை வங்கிகளின் அனைத்து தலைமை அலுவலகங்கள் / மண்டல அலுவலகங்கள் – ஓய்வூதிய இயக்குநர், சென்னை-600 035. (மூலமாக).

அனைத்து பொதுத் துறை வங்கிகள் – ஓய்வூதிய இயக்குநர், சென்னை-35. (மூலமாக).

தலைவர், தமிழ்நாடு ஓய்வு பெற்ற அலுவலர்கள் சங்கம், டி.பி.ஐ. வளாகம், கல்லூரிச் சாலை, சென்னை-600 006.

தலைவர், தமிழ்நாடு தலைமைச் செயலக ஓய்வுபெற்ற அலுவலர்கள் சங்கம், மேடவாக்கம் டேங்க் சாலை, கீழ்பாக்கம், சென்னை- 600 010.

தலைவர், தமிழ் நாடு ஓய்வூதியர் சங்கம், பதிவு எண்-84/2010 எண்.7, நீலி வீராசாமி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-600 005.

தலைவர், அனைத்திந்திய ஓய்வுபெற்றோர் சங்கக் கூட்டமைப்பு, 22, கவரத் தெரு, மேற்கு சைதாப்பேட்டை, சென்னை- 600 015.

தலைவர், ஓய்வுபெற்ற ஆசிரியர் சங்கம், எண் 12, அபயாம்பாள்புரம், மயிலாடுதுறை, நாகப்பட்டினம் மாவட்டம்.

தலைவர், அகில பாரத குடிமை பெற்றோர் மற்றும் ஓய்வூதியர் அமைப்பு, எண் 7, பாரதிதாசன் சாலை, அவினாசி, கோயம்புத்தூர் மாவட்டம்.

தலைவர், இந்திய அதிகாரிகள் சங்கம், எண்.35 ,திரு.வி.க.நெடுஞ்சாலை, இராயப்பேட்டை நெடுஞ்சாலை, சென்னை- 600 014.

தலைவர், தமிழ்நாடு முதியோர் குடியுரிமை பெற்றோர் சங்கம், எண் வி 95, அண்ணா நகர், சென்னை-600 040.

தலைவர், தமிழ்நாடு முதுநிலை குடியுரிமை பெற்றோர் மற்றும் ஓய்வூதியர்கள் சங்கம், எண்.38-பி, பிரதான சாலை, பெருமாள்புரம், திருநெல்வேலி.

தலைவர், ஓய்வுபெற்ற அலுவலர் சங்கம், நாராயணராவ் மாளிகை, முத்து காளத்தி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை- 600 005.

தலைவர், அரசு டான்சி ஓய்வு பெற்ற ஊழியர்கள் சங்கம், ப்ளாட் எண்.65, தாமரை சாலை, அய்யப்பா நகர், பம்பல், சென்னை- 600 075.

தலைவர், ஓய்வுபெற்ற வேளாண்மை பட்டதாரி சங்கம், கே-பிளாக், எண்.2, சாலை ரோடு, ஹவுசிங் யூனிட், திருச்சி-621 003.

தலைவர், தமிழ்நாடு மூத்த வேளாண் வல்லுநர் பேரவை, எண்.11, நாச்சிமுத்து லே அவுட், கே.கே.புதூர், கோயம்புத்தூர் மாவட்டம்.

தலைவர், தமிழ்நாடு மாநகராட்சி மற்றும் நகராட்சி ஓய்வூதியதாரர்கள் சங்கம், வரதப்பன் தெரு, கோட்டை, சேலம்-636 001.

தலைவர், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக ஓய்வூதியர்கள் சங்கம், டி.என்.ஏ.யு வளாகம், கோயம்புத்தூர்-641 003.

தலைவர், தமிழ்நாடு ஓய்வு பெற்ற அரசு ஊழியர் சங்கம், எண்.3(ஜி1), கிருஷ்ணப்ப தெரு, சேப்பாக்கம், சென்னை-600 005.

தலைவர், தமிழ்நாடு ஓய்வு பெற்ற பொதுப்பணித்துறை ஊழியர் சங்கம், எண்.3/454, வீரமா முனிவர் தெரு, முகப்பேர் கிழக்கு, சென்னை-600 037.

த.பி.பா.

தலைவர், ஊரக வளர்ச்சித்துறை ஓய்வூதியர்கள் சங்கம், எண்.3/145, தெற்குத் தெரு, கம்பரசம்பேட்டை அஞ்சல், திருச்சிராப்பள்ளி–620 101.

தலைவர், தமிழ்நாடு சத்துணவு மற்றும் அங்கன்வாடி ஓய்வூதியர் சங்கம், M.R.அப்பன் இல்லம், 3/1076-2, முத்துராமலிங்கம் நகர், விருதுநகர்.

தலைவர், ஓய்வுபெற்ற அலுவலர் சங்கம், பிளாட் எண். 1740, B2, இரண்டாவது தளம், 18-வது பிரதான சாலை, அண்ணா நகர் மேற்கு, சென்னை-600 040.

தலைவர், தமிழ்நாடு ஓய்வுபெற்ற பொதுப்பணித் துறை ஊழியர் சங்கம், பொதுப்பணித்துறை அலுவலக வளாகம், சேப்பாக்கம், சென்னை-600 005.

தமிழ்நாடு இந்த் அப்சார்பி பென்சனர் நலச் சங்கம், எண் 12, 9-வது தெரு டான்சி நகர், வேளச்சேரி, சென்னை -600042.

தலைவர், கிராம உத்தியகஸ்தர்கள் முன்சீப் கர்ணம், ஓய்வூதியர்கள் சங்கம், 10- D, ராதாகிருஷ்ணன் காலனி, முதல் தளம், சாஸ்திரி ரோடு, தென்னூர், திருச்சி.

ஒருங்கிணைப்பாளர், தமிழ்நாடு அமைச்சுப்பணியாளர் கூட்டமைப்பு, எண்-63, தமிழ்நாடு அவுசிங் போர்ட் குவார்ட்டர்ஸ், வல்லன்குமாரவிளை, கன்னியாகுமரி – 629 002.

மாநிலத் தலைவர், தமிழ்நாடு மூத்த வேளாண் வல்லுநர் பேரவை, 1/49 நெடுங்கல் அஞ்சல், காவேரிப்பட்டினம், கிருஷ்ணகிரி மாவட்டம் 635 112.

செயலர், தமிழ்நாடு ஓய்வுபெற்ற நீதிபதிகள் நல சங்கம், D- 39 5வது முதல் குறுக்குத் தெரு, பாரத் ரத்னா ராஜீவ் காந்தி நகர், புதூர், அம்பதூர், சென்னை -600 053.

இருப்புக் கோப்பு / உபரி நகல்கள்.

**—/ ஆணைப்படி : அனுப்பப்படுகிறது /—**

**பிரிவு அலுவலர்**